2010 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அவ்வளவுதான் போதும். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, முடியாது.*

(ஒ) மேட்டூர், காவிரி உபரி நீர் கடலில் கலப்பதைத் தடுத்து சேலம் மாவட்ட விவசாயிகளுக்குப் பயன்படுமாறு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. .தமிழரசு, பேசுங்கள்.*

திரு. அ. தமிழரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகளாக மேட்டூர் காவிரி உபரி நீர் கடலிலே சென்று கலக்கிறது என்று ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லி, திரு. கோக. மணி, தலைவர் உட்பட சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு அந்தத் தண்ணீர் பயன்பட வேண்டுமென்று இங்கு நாங்கள் கோரிக்கை வைத்திருக்கிறோம். அப்போது நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், 'இது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்' என்று சொன்னார்கள். இப்போது இங்கு ஒரு புள்ளிவிவரம், 2000 ஆம் ஆண்டிலே 82 டி.எம்.சி. தண்ணீர், 2005 ஆம் ஆண்டு 142 டி.எம்.சி. தண்ணீர், 2007 ஆம் ஆண்டு 74 டி.எம்.சி. தண்ணீர், உபரி நீராகச் சென்றிருக்கிறது. எனவே, அந்த உபரி நீர் கடலில்லே கலக்காத அளவிற்கு சேலம் மாவட்ட விவசாயத்திற்கு அதைப் பயன்படுத்துவதற்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அந்தப் பணியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன். (குறுக்கீடுகள்)*

3. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். குழுவின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.*

திரு. குத்தாலம் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த 31-வது அறிக்கையினையும், மாவட்ட நிருவாகம்*